செய்தி வெளியீடு எண்: 01 நாள்: 01.06.2021

**தேனி மாவட்டம்**
**மாண்புமிகு கூட்டுறத்துறை அமைச்சர் திரு. இ.பெரியசாமி அவர்கள்**
**முல்லை பெரியாறு அணையிலிருந்து**
**கம்பம் பள்ளத்தாக்கு இருபோக ஆயக்கட்டு பகுதிகளில் முதல் போக சாகுபடிக்காக**
**தண்ணீரை திறந்து வைத்தார்:-**

******

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. இ.பெரியசாமி அவர்கள் தேனி மாவட்டம், முல்லை பெரியாறு அணையிலிருந்து பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு) சார்பில், கம்பம் பள்ளத்தாக்கு இருபோக ஆயக்கட்டு பகுதிகளில் முதல் போக சாகுபடிக்காகவும், தேனி மாவட்ட மக்களின் குடிநீர் தேவைக்காகவும் இன்று (01.06.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஹெச்.கிருஷ்ணனுண்ணி, இ.ஆ.ப., அவர்கள், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் திரு. என்.இராமகிருஷ்ணன் அவர்கள், ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆ.மகாராஜன் அவர்கள், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.எஸ்.சரவணக்குமார் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் தண்ணீரை திறந்து வைத்து, தெரிவித்ததாவது,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேனி மாவட்ட கம்பம் பள்ளத்தாக்கு இருபோக ஆயக்கட்டு பகுதி வேளாண்குடி பெருமக்களின் கோரிக்கையினை ஏற்று, முல்லை பெரியாறு அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டதன் அடிப்படையில், முல்லை பெரியாறு அணையிலிருந்து இன்று முதல் (01.06.2021) கம்பம் பள்ளத்தாக்கு இருபோக ஆயக்கட்டு பகுதிகளில் முதல் போக சாகுபடிக்கு உத்தமபாளையம் வட்டத்தில் 11,807 ஏக்கர் நிலங்களும், தேனி வட்டத்தில் 2,412 ஏக்கர் நிலங்களும், போடிநாயக்கனூர் வட்டத்தில் 488 ஏக்கர் நிலங்களும் ஆக மொத்தம் 14,707 ஏக்கர் நிலங்களுக்கு 200 கன அடியும், தேனி மாவட்ட மக்களின் குடிநீர் தேவைக்காக 100 கன அடியும் ஆக மொத்தம் விநாடிக்கு 300 கனஅடி தண்ணீர் வீதம் 120 நாட்களுக்கு, முதல் போக பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்படுகிறது. முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டத்தில் 14 வருடங்களுக்கு பிறகு 130.90 அடி அளவில் ஜுன் 1-ஆம் தேதியான இன்று முதல் தண்ணீர் திறந்து விடுவது குறிப்பிடத்தக்கதாகும்.

தேனி மாவட்டத்தில் முதல் போக நெல் சாகுபடிக்குத் தேவையான நெல் இரக விதைகளான என்.எல்.ஆர்-34449, 6.1 மெ.டன்னும், கோ-51, 54 மெ.டன்னும் ஆக மொத்தம் 60.1 மெ.டன் விதை மாவட்டத்திலுள்ள அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. நெல் விதைகளுக்கு தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் மானியமாக கிலோவிற்கு ரூ.20-ம் விதைக் கிராமத்திட்டத்தில் ஒரு கிலோவிற்கு ரூ.17.50 மான்ய விலையிலும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் விதையினை விதை நேர்த்தி செய்யத் தேவையான உயிர் உரங்கள், 50 சதவிகித மான்யத்தில் விநியோகம் செய்ய போதுமான அளவு இருப்பு உள்ளது.

தற்போது நிலவும் வேலையாட்கள் பற்றாக்குறையினை போக்க தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் நடப்பாண்டு நெல்லில் இயந்திர நடவு மேற்கொள்ள ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.5,000/- வீதம் இலக்கு பெறப்பட்டு திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. எனவே, அனைத்து விவசாயிகளும் இத்திட்டம் தொடர்பாக வேளாண்மை விரிவாக்க மையத்தினை தொடர்பு கொண்டு விவசாயிகள் பயன்பெற வேண்டும்.

மேலும் மாவட்டத்திற்கு தேவையான இரசாயன உரங்களான யூரியா-1243 மெ.டன்னும், டி.ஏ.பி-419 மெ.டன்னும், பொட்டாஷ்-782 மெ.டன்னும், கலப்புரங்கள்-2004 மெ.டன்னும் தொடக்க வேளாண்மை கடன் கூட்டுறவு சங்கங்களிலும், தனியார் உர விற்பனையாளர்களிடமும் இருப்பு வைக்கப்பட்டு விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளது. கூட்டுறவுச்சங்கங்களின் மூலம் வேளாண் சார்ந்த புதிய கடன்கள் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, விவசாய பெருமக்கள் தாங்கள் சாகுபடி செய்யும் நெல்பயிரில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களை கடைபிடித்து, தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக மகசூல் பெற்று பயன்பெற வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இ.சாய் சரண் தேஜஸ்வி, இ.கா.ப., பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் எம்.சுகுமார், செயற்பொறியாளர் சாம் இர்வின், உதவி செயற்பொறியாளர் எம்.மொக்கமாயன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்க தமிழ்செல்வன், லெட்சுமணன் மற்றும் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**